10th November 1965]

போலீசார்களுக்குக் குடியிருப்பு

* 432 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பேரளத்தில் மத்திய சர்க்காருக்குச் சொந்தமான கட்டடத்தைப் போலீசாரின் குடியிருப்புக்காக வாங்க நமது மாநில சர்க்கார் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்.

(இ) ரூ. 7,757.

கள்ளக்குறிச்சியில் தியணைக்கும் படை நிலையம்

* 433 கேள்வி.—திரு. தா. சின்னசாமி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சியில் ஒரு தியணைக்கும் படையை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கின்றதா ?

கனம் திரு. பூ. கக்கன்: ஆனால் தற்போது பிரையாரிட்டி லிஸ்டின்படி வேறு சில இடங்களில் தியணைக்கும் நிலையங்கள் ஏற்படுத்திய பிறகுதான் கள்ளக்குறிச்சியில் ஒரு நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். இதனால் இதை ஏற்படுத்த இன்னும் கொஞ்ச காலம் செல்லும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தென்னாற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியிலும், திண்டிவனத்திலும் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்தக் காரணத்தினால் கனம் அங்கத்தினர்கள் பலர், "திண்டிவனத்தில் எப்பொழுது தீ அணைக்கும் படை ஏற்படுத்தப்படும்? கள்ளக்குறிச்சியில் எப்பொழுது தீ அணைக்கும் படை ஏற்படுத்தப்படும்?" என்று கேள்விகள் கேட்ட வண்ணமாக இருக்கிறார்கள். இந்த இரண்டு இடத்தைப் பொறுத்தும், எப்போதுமே சரியான பதில் வருவது இல்லையே, அதற்கு என்ன காரணம்?

கனம் திரு. பூ. கக்கன்: அடுத்து வரும் லிஸ்டில் திண்டிவனம் இடம் பெறுகிறது. கள்ளக்குறிச்சி பத்தாவது எண்ணிக்கையில் இருக்கிறது. இப்பொழுது அங்கே தீ அணைக்கும் படை வருவதற்கில்லை.

New Railway Line

* 434 *Q.*—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any recommendations have been made to the Central Government for providing a new railway line between Salem and Madurai (via) Karur and Dindigul; and